[13th August 1960

THE HON. SRI V. RAMAIAH : இப்போது மேல் தட்டுகளை அமைப்பதில் இருக்கக்கூடிய கஷ்டத்தை நன்றாகப் பரிசீலனை செய்து அது சாத்தியமல்ல என்று எனது பதிலில் சொல்லியிருக்கிறேன். தொடர்ந்து பரிசீலனை செய்ய வேண்டுமென்றால் இதையும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அட்வைஸரி கமிட்டியின் முன்பு வைப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

*Sugar factory for Kavundapadi*

* 180 Q.—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் ஜில்லா, பவானி தாலுகா, கவுந்தம்பாடியில் சர்க்கரை ஆலை ஒன்று ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா ?

(ஆ) அப்படியானால், இந்த ஆலையானது கூட்டுறவு முறையில் ஏற்படுத்தப்படுமா அல்லது தனியார் துறை மூலமாக ஏற்படுத்தப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The proposed sugar factory at Kavundapadi, Gobichettipalayam taluk, will be in the private sector.

SRI P. G. MANICKAM : ஸார், இந்த ஆலையை ஏற்படுத்துவதற்கு அரசாங்க அனுமதி கிடைத்தாகி விட்டதா ? அப்படிக் கிடைத்திருந்தால் இந்த ஆலை இன்னும் எவ்வளவு நாளில் முடிவடையும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : ராஜ்ய சர்க்கார் சிபாரிசு செய்திருக்கிறார்கள். இன்னும் லைஸென்ஸ் கிடைக்கவில்லை.

SRI K. R. NALLASIVAM : தனிப்பட்ட முறையில் பிரைவேட் செக்டாரில் ஆரம்பிப்பதாகச் சொன்னார்கள். விவசாயிகளிடையே கூட்டுறவு முறையில் ஆரம்பிப்பதற்கு உற்சாகம் இருப்பதாகத் தெரிகிறதே, அவர்களுக்கு உற்சாகம் கொடுத்து ஆரம்பிக்காமலிருப்பதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்கு முன்பு 15 லட்சம் ரூபாய் இருந்தால் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க முடியும். இப்போது இருக்கும் நிலையில் 25 லட்சம் ரூபாய் சேகரிக்க வேண்டியிருக்கிறது. 25 லட்சம் ரூபாய் சேகரிக்கின்ற அளவுக்கு அங்கு வழியில்லை என்பதால், எப்படியாவது ஒரு பாக்டரி வரட்டும் என்பதற்காக, செய்யக் கூடியவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.